**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.238/2017
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : சாந்தி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of December 2023.

04.12.2023

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். எனது கணவர் பால்ராஜ் சம்பவ சமயத்தில் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். எனது மகன் சதீஷ்காந்த் திருவரங்கத்தில் உள்ள இருதயமேல்நிலைப்பள்ளியில் 2013-2014 ம் வருட கல்வியாண்டில் 10 ம் வகுப்பு பள்ளிவிடுதியில் தங்கி படித்து வந்தான். 2013 ம் வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற அரையாண்டு தேர்வு முடிந்து எனது வீட்டிற்கு எனது மகன் வந்தான். அரையாண்டு விடுமுறை முடிந்து 02.01.2014 ம் தேதி எனது மகனை காலை 06.00 மணிக்கு பள்ளிக்கூடத்திற்கு செல்லும்போது பள்ளிக்கூடத்திற்கு செலுத்தவேண்டிய பள்ளிகட்டணம் ரூ.1,000/- மற்றும் எனது மகனுக்கு செலவிற்காக ரூ.150/- ஆக மொத்தம் ரூ.1,150/- கொடுத்து எனது மகனை சிந்தா பேருந்தில் பள்ளிக்கு அனுப்பிவைத்தேன். அவன் சந்தோசமாக பள்ளிக்கு சென்றான்.

2) அன்றைய தினம் மாலை 05.00 மணியளவில் எனது மகன் பள்ளியில் தூக்கிட்டு இறந்துவிட்டதாக பள்ளி நிர்வாகத்திடமிருந்து எனக்கு தகவல் வந்தது. நான்

செல்வதற்கு முன்பாகவே எனது தங்கை ஜெயமேரி, எனது தங்கையின் கணவர் செல்வம், எனது தங்கை சுமிதா ஆகியோர் பள்ளியில் இருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது எனது மகனின் பிரேதத்தை கீழே இறக்கி தான் வைத்திருந்தார்கள். நான் சென்றவுடன் என்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிவிட்டு பிரேத விசாரணைக்கு அனுப்பிவிட்டார்கள். நாங்கள் ஆம்புலன்ஸை எடுக்கவிடாமல் மறியலில் ஈடுபட்டோம்.

3) ஆம்புலன்சிலிருந்து பிரேதத்தை பள்ளி விடுதியில் இறக்கி வைத்துவிட்டார்கள். எனது மகன் அரையாண்டு தேர்விற்கு முன்பாக பள்ளியில் நடைபெற்ற கல்விஉதவித்தொகை பெறவேண்டி மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளான். அந்த போராட்டத்தில் கலந்துகொண்டதால் பள்ளியில் அடித்ததாகவும் அதனால் இடது காலில் காயம் ஏற்பட்டது என்று என்னிடம் விடுமுறையில் இருக்கும்போது கூறினான்.

4) எனது கணவர் இந்து மதத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது தாயார் இறப்பிற்காக எனது மகனுக்கு மொட்டை போட்டிருந்தோம். 02.01.2014 ம் தேதி பள்ளிக்கு சென்ற எனது மகனை பார்த்துவிட்டு தாளாளர் வின்சென்ட்ராஜன் காலால் எனது இளையமகன் சதீஷ்காந்த்யின் பிறப்புறுப்பில் எட்டி உதைத்ததாக எனது மூத்தமகன் சுரேஷ்காந்த் என்னிடம் கூறினான். எனது மகன் சதீஷ்காந்த் அதோடு மயங்கிவிழுந்துள்ளான். மேலும், எனது மூத்த மகன் என்னிடம் மற்றொரு தகவலையும் கூறினான். தாளாளர் வின்சென்ட்ராஜன் வேறுஒரு பெண்ணிடம் தவறாக இருந்ததை எனது மகன் சதீஷ்காந்த் பார்த்துவிட்டதாகவும், அதிலிருந்தே தாளாளர் வின்சென்ட்ராஜன் எனது மகன் சதீஷ்காந்த் மீது கோபமாக இருந்ததாகவும் கூறினான்.

5) தலைமையாசிரியர் பீட்டர்ராயப்பன் என்னிடம் அரையாண்டு தேர்வு நடைபெற்றபோது சமூகஅறிவியலில் எனது மகன் சதீஷ்காந்த் பிட் அடித்ததால் நாங்கள் பெற்றோரை அழைத்து வரச்சொன்னோம் அதற்கு பயந்துபோய் எனது மகன் தூக்கிட்டு இறந்துபோய்விட்டதாக கூறினார். எனது மகனின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி தாளாளர் வின்சென்ட்ராஜன், தலைமையாசிரியர் பீட்டர்ராயப்பன் மற்றும் விடுதி வார்டன் சேவியர்ஜான் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்ககோரி கீழத்தூவல் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்

புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.238/2017
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : செல்வம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of December 2023.

04.12.2023

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுகிறேன். 02.01.2014 ம் தேதி மாலை 05.00 மணியளவில் எனது கொளுந்தியா சுமிதா எனக்கு போன் செய்து அசா.1 சாந்தியின் மகன் சதீஷ்காந்த் இறந்துவிட்டதாக கூறினார். உடனே நான் இராமநாதபுரத்திலிருந்து திருவரங்கத்தில் உள்ள பள்ளிக்கு வந்துவிட்டேன். நான் பள்ளிக்கு வந்திருந்தபோது பிரேதத்தை கீழே இறக்கிபோட்டு இருந்தார்கள். ஏன் நாங்கள் வருவதற்குள் பிரேதத்தை கீழே இறக்கிவிட்டீர்கள் என்று கேட்டோம். காவல்ஆய்வாளர் கீழே இறக்க கூறியதால் இறக்கினோம் என்று கூறினார்கள்.

2) சதீஷ்காந்த் இறந்தது தொடர்பாக சந்தேகமாக இருந்ததால் அசா.1 சாந்தியை அழைத்துக்கொண்டு கீழத்தூவல் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு பின்பு பிரேதத்தை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்து உடலை நல்லடக்கம் செய்தோம்.

3) பள்ளியில் ஒழுங்காக படிக்காமல் இருந்ததால் சதீஷ்காந்த்யின் அம்மாவை அழைத்து வரச்சொல்லியிருந்தோம். ஆனால் சதீஷ்காந்த் அம்மாவை அழைத்து வராமல் தூக்கிட்டுக்கொண்டதாக கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.238/2017
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : ஜெயமேரி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of December 2023.

04.12.2023

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். 02.01.2014 ம் தேதி மாலை 05.00 மணியளவில் எனது தங்கை சுமிதா எனக்கு போன் செய்து அசா.1 சாந்தியின் மகன் சதீஷ்காந்த் இறந்துவிட்டதாக கூறினார். உடனே நானும், எனது கணவர் செல்வமும் திருவரங்கத்தில் உள்ள பள்ளிக்கு சென்றுவிட்டோம். நான் பள்ளிக்கு வந்திருந்தபோது பிரேதத்தை கீழே இறக்கிபோட்டு இருந்தார்கள். ஏன் நாங்கள் வருவதற்குள் பிரேதத்தை கீழே இறக்கிவிட்டீர்கள் என்று கேட்டதற்கு காவல்ஆய்வாளர் கீழே இறக்க கூறியதால் இறக்கினோம் என்று கூறினார்கள். நாங்கள் செல்லும்போது அங்கு காவலர்களை தவிர வேறுயாரும் இல்லை.

2) சமூகஅறிவியல் தேர்வில் பிட் அடித்துவிட்டதால் பெற்றோர்களை அழைத்துவரச்சொல்லி பெற்றோரை அழைத்து வராததால் தூக்கிட்டுக்கொண்டதாக அங்கிருந்த காவலர்கள் கூறினார்கள். சதீஷ்காந்த் இறந்தது தொடர்பாக சந்தேகமாக இருந்ததால் அசா.1 சாந்தியை அழைத்துக்கொண்டு கீழத்தூவல் காவல்நிலையம்

சென்று புகார் அளித்துவிட்டு பின்பு பிரேதத்தை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்து உடலை நல்லடக்கம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.